# DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 39/2014

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents –PW2

| | | |
|---|---|---|
| Name | : | சாருமதி |
| Husband Name | : | முருகபாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது முதுகுளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் அதிகார கடிதத்துடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 25.03.1960 ஆவண எண்.2/1960 என்ற உயில் பத்திரத்தின் SRO நகலை கொண்டு வந்துள்ளேன். அது Ex.X1 ஆகும். அந்த ஆவணத்தில் குமரகுரு, ராமையாபிள்ளை மகன் பாலசுப்பிரமணியன் பிள்ளை, முத்துசாமி மகன் பரமையா, கர்ணம் ராமசாமி பிள்ளை, ஆறுமுகம் சேர்வை மகன் வெள்ளைசாமி சேர்வை, தலையாரி ஜெகநாததேவர், சின்னப்பிள்ளை மகன் எஸ்பி சுப்பிரமணியம் பிள்ளை ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். உயிலை எழுதிக்கொடுத்தவர் முத்துவேல் சேர்வை ஆவார். உயில் பத்திரம் பதிவு செய்யும்போது முத்துவேல் சேர்வை வைத்த கைரேகை நகலும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

25.03.1960 தேதியில் யாருக்கு யார் உயில் எழுதிவைத்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கொண்டுவந்த ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்ற ஆவணம் இல்லை என்றால் சரிதான். யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்ற விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

6 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

மேற்கண்ட 2ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

15 ம் பிரதிவாதி நீதிமன்ற காப்பாளர் தரப்பு குறுக்கு விசாரணை

மேற்கண்ட 2ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை

எங்களது அலுவலகத்தில் 1960ல் மேற்கண்ட ஆவணம் பதிவு செய்யும்போது சாட்சிகளிடம் தனியாக அலுவலக பதிவேட்டில் கையெழுத்துக்கள் பெறுவது கிடையாது.